தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு எண். 119/2026 **நாள் 12.10.2026**

செய்தி வெளியீடு

தேர்வாணையத்தால் 16.08.2026 முதல் 20.08.2026 வரை மற்றும் 07.09.2026 முதல் 12.09.2026 வரை நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) --க்கான **(அறிவிக்கை எண் 04/2026, நாள் 20.05.2026, 4A/2026, நாள் 11.06.2026 மற்றும் 4B/2026, நாள் 16.07.2026)** விடைத்தாள்கள் (கணினி வழித் தேர்வு) தேர்வாணைய இணையதளத்தில் 12.10.2026 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன **(பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலம் 12.10.2026 முதல் 10.11.2026 வரை)**. தேர்வர்கள், தங்களுடைய ஒருமுறை பதிவு எண் வாயிலாக விடைத்தாளினை உரிய கட்டணம் செலுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலம்: 12.10.2026 முதல் 10.11.2026 (30 நாள்கள்)

விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்கு பிறகு, விடைத்தாள்களை வழங்கக் கோரி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்